*(வலைப்பின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*(1999 ஆம் ஆண்டு நவெம்பம் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, திசெம்பர் மாதம் 03 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 12.75** **தபாற் செலவு : ரூபா 5.25**

## 1999 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை 1 (திருத்தச்) சட்டம்

[1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.— ஓ 6/99

## 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் முதன்மைவச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பந்தியின் (LXXV) என்னும் உட்பந்தியில் "1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட புவிச் சரிதவியல் நிலஅளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங் களுக்கும் பதிலாக, 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சடடத்தின் கீழ் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் நிலஅளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பந்தியின் முடிவில் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(LXXVI) பொதுநலவாய அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ;

(LXXVII) 1982 ஆம் ஆண்டின் 17 அம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் சுட்டணைக்கப் பட்ட இந்திய — இலங்கை மன்றம்.

H-022545

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*3.* 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (VIII) ஆம் உட்பந்தியில் "இலங்கைக்குத் தொழில்நுட்பக் கூட்டுறவை வழங்கும் பொதுநலச் சமவாயச் செயலகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கைக்குத் தொழில் நுட்பக் கூட்டுறவை வழங்கும் பொதுநலச் சமவாயச் செயலகம் அல்லது பொதுநலவாய அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*4.* 1998 ஆம் ஆண்டுன் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் உட்பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட உட்பந்திகள் (XXII) மற்றும் (XXIII) என்பவற்றை (1) ஆம் உட்பிரிவின் உட்பந்திகள் (XXIV), (XXV) என மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட உட்பந்தி (XXV) என்பதனை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

(XXVI) எந்தக் கம்பனியின் பங்குகள், இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் 2000, மாச்சு 31 ஆந் தேதி அல்லது அதற்குமுன்னர் விலை கோரிப் பெறப்பட்டனவோ அந்த ஏதேனும் கம்பனியில் எவரேனும் ஆளினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் பங்குகளின், 1999 ஏப்பிறல் 1 ஆம் தேதியின் பின்னர் ஆனால் 2000 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னரான விற்பனை ;

(XXVII) ஏதேனும் கம்பனியால் வழங்கப்பட்டதும் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதிப் பரிவர்த் தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் சொத்து வத்திலான மாற்ற நேரத்தில் விலை கோரிப் பெறப்பட்டதுமான ஏதேனும்

(i) பங்க ஆணைப்பத்திரத்தின் அல்லது

(ii) நிதிசார்ந்த வேறு ஏதேனும் சாதளத்திலிருந்து பெறப்படுவதும், அதில் தங்கியிருப்பதுமான நிதிசார்ந்த சாதனத்தின்

சொத்துவத்திலான மாற்றம்.".

**5.** இறுதியாக 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத் தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியில், "எந்த இலங்கை யினருக்கு இலங்கைக்கு வெளியே வேலை ஏற்பாடு செய்யபப்பட்டுள்ளதோ அல்லது பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதோ" என்பதிலிருந்து "ஏதேனும் பணத் தொகையும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "எந்த இலங்கையருக்கு இலங்கைக்கு வெளியே வேலை வாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அல்லது பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் இலங்கையர் தொடர்பில் —

(அ) 1990 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1999 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட இரண்டாயிரம் ரூபாவை ; அத்துடன்

(ஆ) 1999 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டில் செலுத்தப்பட்ட மூவாயிரம் ரூபாவை

விஞ்சாததான எதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகமும்";

(2) அப்பிரின் (மம) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(மம) 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியாச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால், எந்த இலங்கையருக்கு இலங்கைக்கு வெளியே தொழில்வழங்கப்பட்டுள்ளதோ அல்லது பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் இலங்கையர் தொடர்பில் அத்தகைய பணியகத்தால் —

(அ) 1990 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1999 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் பெறப்பட்ட இரண்டாயிரம் ரூபாவை, அத்துடன்

(ஆ) 1999 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் பெறப்படட் மூவாயிரம் ரூபாவை

விஞ்சாததான எதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகமும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிதின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியில் —

(i) அப்பந்தின் (iஅ) என்னும் உட்பந்தியில் "(உட்பந்திகள் (ii) இலும் அத்துடன் (iiஅ) விலும் குறிப்பீடுசெய்யப்படும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாதவையும்)" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(உட்பந்தி (ii), (iiஅ) அல்லது (iiஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் பெறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாதவையும்)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ii) உட்பந்தி (iiஅ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

(iiஅ) எவரேனும் ஆளினால் 1998 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் பெற்றுக்கொள் ளப்பட்டதும் அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வியா பாரத்தில், தொழிலில், உயர் தொழி லில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் பயன்படுத்தப்டுவதுமான கணனி வன்ரகத்தை, தொலைத்தொடர்பு உபகரணத்தை அல்லது அவற்றிற் கான ஏதேனும் துணையுறுப்பை மாற்றீடு செய்வதற்கென அல்லது தரமுயர்த்துவதற்கென 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2000 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணனி வன்ரகம் அல்லது தொலைத்தொடர்பு உபகரணம் அல்லது அத்தகைய கருவிக்கான அல்லது உபகரணத்திற்கான துணையுறுப்பு புதிய நூற்றாண்டிற்கு இசைந்ததாக இருப்பின் அதனைப் பெற்றுக் கொள்வதற்கான செலவின் நூறு சதவீதப்படி ;"

(அ) அப்பிரிவின் (உஉஉஉஉ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(உஉஉஉஉ) (ii) எந்தக் காலப்பகுதியின் இலாபங்களும் வருமானமும் ஆய்ந்தறியப் படுகின்றனவோ அந்தக் காலப் பகுதியில் எவரேனும் ஆளினால் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அத்தகைய ஆளினால் ஏதேனும் வியாபாரத்தில், தொழலில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் பயன்படுத்தப்படுவதுமான, (ii) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்ட கணனி மென்ரகம் அல்லாத ஏதேனும் கனனி மென்ரகம் தொடர்பிலான விடுதொகையொன்று, அத்தகைய விடுதொகை —

(அ) அத்தகைய கணனி மென்ரகம் 1997 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்டவிடத்து அத்தகைய கணனி மென்ரகத்தைக் கொள்ளலின் செலவின் முப்பத்து மூன்றும் மூன்றிலொரு சதவீதத்திற்குச் சமமானவொரு தொகையாகும் ; அத்துடன்

(ஆ) அததகைய கணனி மென்ரகம் 1997 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டவிடத்து, அத்தகைய கணனி மென் ரகத்தைக் கொள்ளலின் செலவின் ஐம்பது சதவீதத் துக்குச் சமமான தெகையாகும் ;

*(4) 1998 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ஒருவரால் பெற்றுக்கொள் ளப்பட்டதும் அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக் கப்படும் ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் பயன்படுத்தப்படுவதுமான கணனி மென்ரகத்தை மாற்றீடுசெய்வதற் கென அல்லது தரமுயர்த்துவதற் கென 1998 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2000 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குமுன்னர் அத்தகைய ஆளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் கணனி மென்ரகம் 1998 ஏப்பிறல் 1 ஆந் தேயன்று அல்லது அதன்பின்னர் பெற்றுக்கொள்ளப் பட்ட அத்தகைய கணனி மென்ரகம் புதிய நூற்றாண்டிற்கு இசைந்ததாக இருப்பின் அதனைக் கொள்ளு வதற்கான செலவின் நூறு சத வீதப்படி ;*

*ஆயினும், அத்தகைய கணனி மென்ரகம் தொடர்பில் முந்திய வரிமதிப்பீட்டு ஆண்டுகளில் அளிக்கப்பட்ட விடுதொகையின் மொத்தம் அத்தகைய கணனி மென்ரகத்தைப் பெற்றுக்கொள்ளு வதற்கான செலவுக்குச் சமமாக இருப்பின், அததகைய கணனி மென்ரகம் தொடர்பில் எவரேனும் ஆளுக்கு இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலா காது.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** இறுதியாக 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் திருக்கப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு மேலும் கிருத்தப்படுகதின்றது :—

(2) அவ்வுட்பிரிவிற்கான மூன்றாவது காப்புவாசகத்தில் "1998 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 மாச்சு 31 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கும் அததுடன் 1997 மாச்சு 31 முதல் 1997 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1989 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்.

(2) அவ்வுட்பிரிவிற்கான நாலாவது காப்புவாசகத்தில் "1989 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏஎதனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1989 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 1997 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1 தொடக்கம் 1997 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களையும இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டராக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** இறுதியாக 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் திருக்கப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (i) ஆம் பந்தியில் "(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), அல்லது (ங) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களக்கும் பதிலாக "(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங) அல்லது (த) என்னும் பந்தியில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பந்தியின் (ii) ஆம் பந்தியில் "(ட) அல்லது (த) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(ட) என்னும் பந்தியில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஈஈஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**9.** 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட, முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஈஈஈ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு" என்பதிலிருந்து "வரியானது பின்வருமாறு கணிக்கப் படுதல் வேண்டும் :—" என்பது வரையிலான சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக, பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் :—

"(கம்பனியொன்றல்லாத வேறு) எவரேனும் ஆளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் :

(அ) 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள்) ஏதேனும் கமத்தொழில் பொறுப்புமுயற்சியிலிருந்து அல்லது உல்லாசப் பிரயாணத்துறையை ஊக்குவிப்பதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து கிடைக்கும் எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து ; அல்லது

(ஆ) 1999 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, ஏதேனும் கமத் தொழில் பொறுப்புமுயற்சியிலிருந்து உல்லா சப்பிரயாணத்துறையை மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது நிர்மாண வேலைக்கான ஏதேனும் பொறுப்புமுயற்சியிலிருன்து, (3அ என்னும்

பிரிவின் கருத்தெல்லைக்குள்) கிடைக்கும் இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து ,

(இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் "குறித்துரைக்கப்பட்ட இலாபங்கள்"எனக்குறிப்பீடு செய்யப்படும்). அத்தகைய வருமானத்தின் பாகமொன்றின்மீது (இப்பிரிவில் இதனகத்துப் பின்னர் வருமானத்தின் இயைபான பாகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செலுத்தப்படற்பாலதான வருமான வரிவீதம் பதினைந்து சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்து, அப்போது வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பில் வரியானது பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும் :–";.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(i) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் "விற்பனையிலிருந்து வரும் இலாபமு மாகும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "விற்பனையிலிருந்துவரும் இலாபமுமாகும்"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை சேர்ப்பதன் மூலமும் :–

"(ஈ) "நிர்மாண வேலைக்கான பொறுப்புமுயற்சி" என்பது, ஏதேனும் –

(i) கட்டிடத்தின் ;

(ii) வீதிகளின் அல்லது பாலங்களின் ; அல்லது

(iii) நீர் வழங்கல், வடிகால் அல்லது கழிவுநீர் வடிகால் திட்டங்களின்

நிர்மாணத்திற்கென வதிவுள்ள ஆளொருவரால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்புமுயற்சி யொன்று என்று பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஈஈஈஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**10.** ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றெட்டாம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஈஈஈஈ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

(1) ஏதேனும் கம்பனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் :—

(அ) 1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, ஏதேனும் கமத்தொழில் பொறுப்புமுயற்சியிலிருந்து அல்லது உல்லாசப் பிரயாணத்துறையை மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து (3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள்) கிடைக்கும் எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்ற விடத்து,

(ஆ) 1999 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் கமத்தொழில் பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது உல்லாசப் பிரயாணத்துறையை மேம்படுத்துவதற் கான ஏதேனும் பொறுப்புமுயற்சியிலிருந்து அல்லது நிர்மாண வேலைக்கான ஏதேனும் பொறுப்புமுயற்சியிலிருந்து (3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள்) கிடைக்கும் இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து.

அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் கொண்ட அத்தகைய வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகம், இவ்வத்தியாயத்தின், அத்தியாயம் VIIIஅ என்பதன் அல்லது அததியாயம் IX இன் வேறு ஏதேனும் ஏற்பாட்டில்முரணாக எது எவ்வாறிருப் பினும், பதினைந்து சதவீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்."; அத்தடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் கமத்தொழில் பொறுப்புமுயற்சியில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் கமத்தொழில் பொறுப்புமுயற்சியிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம் அத்துடன் நிர்மாண வேலைக்கான பொறுப்பு முயற்சி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டராக்கத்தின் 32 உஉஉஉ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 உஉஉஉ என்னும் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "வரிமதிப்பீட்டாளர் திருப்திப்படுகின்றவிடத்து" என்பது தொடக்கம் அப்பந்தி முடிவுறும் வரையிலான சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"வரிமதிப்பீட்டாளர் திருப்திப்படுகின்றவிடத்து, அக்கம்பனி தொடர்பில்,

(1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கழிப்பனவானது, 1997, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுகளுக்கு அக் கம்பனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 உஉஉஉஉ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 உஉஉஉஉ என்னும் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "பதிவு செய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை" என்பதிலிருந்து அப்பிரிவின் இறுதிவரையிலான சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்திப்படுகின்றது :—

"*பதிவு செய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை முந்நூறு பேர்களுக்குக் குறையாமல் இருக்கின்றதென வரிமதிப்பீட்டாளர் திப்தியுறுகின்றவிடத்து,*

*(1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கழிப்பனவானது, 1997, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, அத்தகைய பாகத்தின் இரண்டரைச் சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றாக அக்கம்பனிக்கு ஏற்புடையதாதல் வேண்டும்*".

***13.*** *ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவுஅப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் வட்டி என்னும் வரைவிலக்கணத்தின் (ஆ) என்னும் பந்தியில், அப்பந்தியின்* (ii) *ஆம் விடயத்தை உடனடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது* :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

"(iii) *இலங்கை பிணையங்கள் பரிவர்த்தை ஆணைக்குழு வால் உரிமமளிக்கப்பெற்ற ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் விலை கோரப்படும் எவரேனும் ஆளினால் வைத்திருக் கப்படும் முறி, பத்திரம், தொகுதிக்கடன், கடன் பங்குத் தொகுதி அல்லது வேறு பிணையத்தின் மீது;*"

***14.*** *ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம்* IV *இல் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படு கின்றது* :—

*முதன்மைச் சட்ட வாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

*(அ) அப்பாகத்தின் (ஈ) என்னும் பந்தியில்* "*1997 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு*" *என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,* "*1997 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1999 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு.*" *என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.*

(ஆ) அப்பாகத்தின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(உ) 1999 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு —

| | | |
|---|---|---|
| முதலாவது ரூபா 500,000 | மீது | இல்லை |
| அடுத்த ரூபா 150,000 | மீது | 5% |
| அடுத்த ரூபா 150,000 | மீது | 10% |
| மிகுதியின் மீது | | 15% |

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**15.** (1) இச்சட்டத்தின் 4, 5, 9, 10, 13, 14 ஆகிய பிரிவுகளால் முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 14, பிரிவு 15, பிரிவு 32 ஈஈஈ, பிரிவு 32 ஈஈஈஈ, பிரிவு 113அ என்பவற்றிற்கும் முதலாம் அட்டவணைக்கும் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1999 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1998 சனவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1997 நவெம்பர் 6 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் கனிப்பொருட்கள், சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் நிலஅளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் தொடர்பில்

*1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சடடத்தின் 2(1)(இ) என்னும் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தமானது, சொல்லப்பட்ட சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் எல்லா நோக்கங்களுக்காகவும் 1993 மாச்சு 18 ஆம் திகதி நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*ஒவ்வாமைஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

***16***. *இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்பாடும் பட்சத்தில் சிங்கள உரையே மேலாங்கி நிற்றல் வேண்டும்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*